

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

உ

ஆரம்பமானது: விரோதிவரு (1889) ஆவணிமீ உ௪உ.

THE SAIVA PRAKASA PRESS

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்"

இந்துசாதனம்

Hindu Organ.

"சீர்பூத்த கருவிதிருணர்ச்சி தேங்கச்
செம்பூத்த வேதாகம மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருளை நீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்,
பேர்பூத்த வொளார்த்த நீனிது துங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேழு
மதர்ப்பூத்த விநாயகன்றன் வணங்கி [illegible]"

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்தயர் தீர்கவே."

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவவருஷ சித்திரைமீ கூ0உ (1935 மே 13 திங்கட்கிழமை.) { இலக்கம்—கூ

கல்வி இன்மையைப் போக்க ஓர் நூதனவழி.

:*:

100-க்கு 90-பேர் கல்விமான்களாகலாமாம்.

:o:

அமெரிக்க அறிஞரின் புதுமுயற்சி.

அமெரிக்க பிரபல போதகாசிரியரான டக்ரர் பிராங்க் ஸி. லபாகா என்பவர் உலகத்திற் கல்வி இன்மையைப் போக்கத் தாம் ஓர் வழி கண்டுபிடித்துவிட்டதாக, அதனைப்பற்றி இற்றைக்குச் சின்னாட்களுக்குமுன் சென்னையில் ஓர் பிரசங்கம் செய்தார் அதன் சாரம் வருமாறு:-

"இந்நூதன முறையைப் பல தேசங்களில் அநுட்டானத்திற்கு விடுத்தேன். பிலிப்பைன் தீவுகளில் இது அமிதமான பயனைத் தந்திருக்கிறது. இம்முறையை முதல்முதலில் அத்தீவுப் பெண்களே கையாண்டனர். அவர்களிடம் மற்றவர்களும் பயின்றனர். இந்த முறையை இந்நாட்டிலும் பரவச் செய்தால் 100 க்கு 90 விகிதமானோர் மிகச் சொற்பகாலத்தில் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாகிவிடுவர். சாதாரண முறையான கல்வியினுல் வருஷக் கணக்கு எடுக்கும்; ஆனல் இம்முறையினுல் இந்தியாவானது 20 ஆண்டுகளில் கல்வி கற்ற நாடாகிவிடும்.

"இம்முறை இலகுவாகக் கற்கத்தகுந்தது. இலகுவாகப் போதிக்கத் தக்கது இதன்பொருட்டு எழுத்துப் படங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படங்களின் உதவியால் எந்தப் பாமரனும் விஷயங்களைக் கிரகிக்க முடியும். இப்படங்களின் உதவியைக் கொண்டு முன் பின் படிப்பு வாசனையற்ற ஓர் பையனுக்கோ ஓர் தொழிலாளிக்கோ கற்பித்தால் அவன் சிறிது நாட்களில் தான் கற்றதை இப்படங்களின் உதவியைக் கொண்டு கல்வியறிவற்ற மற்றவர்களுக்கும் பயிற்றலாம். இந்தமுறையை மேனுடுகளிற் பல இடங்களில் உள்ளவர் அநுசரித்து கைமேற் பலன் கண்டிருக்கின்றனர்."

இந்தியாவுக்கு ஏற்றதான எழுத்துப் படங்கள் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மராட்டியம், உருது முதலிய பாஷைகளில் தயாரிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

சுறுமீன் விழுங்குவன.

சுறு மற்சங்கள் பேதமின்றி எந்தப் பொருளையும் விழுங்குமென்று அநுபவத்திற் கண்டோர் சிலர் வெளியிட்டுள்ளனர். சுறு எந்தப் பொருளைக் கடலிற் கண்டாலும் அதனை விழுங்கும்படி விரைந்துபோகின்றது. 14 அடி நீளமுள்ள ஒரு சுறுவை வலைப்படுத்திப் பிடித்து வெட்டிப் பார்த்தபோது அதன் உதரத்துள் ஒரு சாக்குக்கொண்ட நிலக்கரி; இரண்டு வெறுந் தகரம், பல கோப்பைகள் காணப்பட்டனவாம். வேறொரு சுறுவை வெட்டிப் பார்த்தபோது அதன் வயிற்றுள் செங்கற்கட்டி கழுத்தில் மாட்டப்பட்ட ஒரு பூனை காணப்பட்டதாம். இன்னொரு சுறுவின் வயிற்றுள் ஒரு "கெடிகாரம்" பிடாரணப்பை யென்னுமிவைகள் காணப்பட்டனவாம்.

சமயம்-அது மாற்றமடையுமா?

(T. L. இராமக்கிருஷ்ணன்.)

(முற்றொடர்)

மேற்காட்டப்பட்டவைவற்றல் இருந்து பழையவர்கள் சாஸ்திரங்களில "விதிக்கப்பட்ட" படியே எப்போதும் நடக்கவேண்டுமென்றும், அவ்விதியிலிருந்தும் அணுவளவேனும் பிசகினல் நரகம் கிடைக்குமென்றும் கூறுவது விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி மிக்குடைய இக்காலத்தில் எடுபடுமோ? ஆசாரானுட்டானங்கள் ஓர் சமூகத்தாருக்கே இயற்றப்பட்டன. ஆனல் ஒவ்வொருவரும் அப்படித்தான் நடக்கவேண்டுமெனக் கட்டுப்படுத்தல் பிழை. முக்கிய கொள்கைப்படி பழக்கவழக்கப்படி விக்கிரகாராதனையும் செய்யவேண்டும் என இப்பழையவர் கூறுகின்றனர். ஒருவன் தனது வீட்டு அறை ஒன்றனுள் காளியின் படத்தையோ, வேறோர் திருவுருவத்தையோ வைத்துத் தனது எண்ணப்படி பக்தியுடன் பூஜை செய்வதையும் இப்பழையவர்களிற் சிலர் சந்தேகத்துடன் நோக்குகின்றனர். ஏன்? அவன் பூஜை செய்யும் முறை பழைய சாஸ்திரப்படி இல்லையாம்!

பழையவர்கள் இப்படிப் பழைய சம்பிரதாயங்களையும் வெளித்தோற்றங்களையும் கட்டிப்பிடித்தழுவதால், மற்றவர்களும் அப்படித் தம்மைப் போலச் செய்யவேண்டும் எனக் கூக்குரலிடுவதால் அவர்களுக்கும் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நம் வாலிபர்க்குமிடையே பிணக்கு ஏற்படமுடிகிறது. ஓர் அமைப்புத் திட்டத்தில் ஆசாரானுட்டானங்கள் இருத்தல் நலம் தான். ஆனல் அவை மனித முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருக்கவொண்ணுது. பழைய பழக்க வழக்கங்கள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதனல் சில சந்தர்ப்பங்களில் தனித்தனியாளரின் முன்னேற்றத்திற்குப் பங்கம் ஏற்பட்டுவிடுகிறது.

தீண்டாமை என்பதை எடுத்துக்கொள்ளுவோம். எம்முள்ளே ஓர் பகுதியாரை நாம் தீண்டாச் சாதியார் என ஒதுக்கிவைத்திருக்கிறோம் "இத்தீண்டா"ச் சாதியார்கள் ஆன்மார்த்த விஷயத்தில் அதிகம், எம்மிலும் பார்க்க மிக்க அதிகம், முன்னேற்றமடைந்த ஒருவர் இருவர் இருக்கலாம் அவர்கள் ஆலயதரிசனம் செய்வதை நாங்கள்— அதாவது பழையவர்கள் அநுமதிக்கின்றோமா? சாஸ்திரங்கள் தீண்டாச்சாதியாரைக் கோவிலுக்குள் அநுமதிக்கவொண்ணுது என்று கூறுகின்றனவே என்று கூறுகிறார்கள் நம் பழையவர்கள்: இனி வேதங்களை எம்மிற் சிலர் வாசிக்கவொண்ணுது என விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஓர் சமூகம் ஜீவத்துவத்துடன் இருக்க வேண்டுமானல், அதன் அறிஞர்கள் காலத்துக்குக்காலம் அச்சமூகத்தின் குறைபாடுகள் இன்னவை என்பதை ஆராய்ந்து, சமூகத்தின் நன்மைக்கேற்பப் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்றாங்கு திருத்தங்களைச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அச் சமூகம் நாசமாய்விடும் என்பதற்கையமின்று. இப்போது ஹிந்துக்களாகிய எம்மைச் சரியான வழிப்படி செலுத்த வல்ல தலைவர்கள் வேண்டும். பழைய மூடக்கொள்கைகள், சம்பிரதாயங்கள் யாவும் காற்றிற் பறக்கவிடப்படல் வேண்டும். இதைவிடுத்து, போஜனம் அருந்திய பின் நாம் எத்தனை தரம் கைகளைச் சுத்தி செய்யவேண்டும், எம் கண்ணுக்கெட்டாத தூரத்தில் இறந்த ஒரு சுற்றத்தவர் பொருட்டு எத்தனை நாளைக்கு ஆசௌசம் காத்தல் வேண்டும், ஓர் தீண்டாச் சாதியார், உயர் சாதியான் நிற்கும் இடத்திலிருந்து எத்தனையார் தூரத்தில் நின்று பேசவேண்டும் என்னும் இன்னோரன்னவற்றைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தால் உண்மையில் எமது அருமருந்தன்ன ஹிந்துமதம் சமையலறைச் சமயமாய்விடும் என்பதற்கையமின்று.

ஹிந்துவீரர்களே எழுமின்!

சமயம், பாரமார்த்திகம் இவற்றின் வெற்றியே பாரத நாட்டின் வெற்றியென்பதாக இந்தியாவின் மகிமைவாய்ந்த சக்கரவர்த்தியான அசோகவர்த்தனர் கூறியிருக்கிறார். உலகம் மற்றொரு முறையும் இந்தியாவினுல் ஜெயிக்கப்பட வேண்டும். இதுவே என் வாழ்க்கையின் கனவாகும். உங்களில் ஒவ்வொருவரும் அக்கனவைக் கண்டுவரவேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அக்கனவு மெய்யாகும்வரையில் நீங்கள் சோர்வடைந்து நிற்கக் கூடாது.........பாரதநாடு இப்பூவுலக முழுவதையும் ஜெயித்தல் என்பதே நம் முன்னுள்ள மகத்தான இலட்சியமாகும். அதற்குக் குறைவான இலட்சியம் நமக்கு வேண்டாம். அந்த இலட்சியத்திற்கு நாம் ஒவ்வொருவரும் சித்தமாகவேண்டும். அதற்காக அரும்பாடுபடவேண்டும். அந்நியநாட்டார் வந்து இந்நாடு முழுவதையும் தங்களுடைய சைன்ய மயமாக்கட்டும். அதைப் பொருட்படுத்தவேண்டாம். பாரதர்களே! எழுந்திருங்கள். உங்கள் பாரமார்த்திக ஆயுதத்தினுல் உலகை வெற்றி கொள்ளுங்கள்.

—ஸ்ரீமத். சுவாமி விவேகானந்தா.

பிரிட்டிஷ் பிரபுக்களின் அநுதாபம்.

(*)

ஜெர்மனிக்கு ஹிதமொழிகள்.

கெஞ்சினுல் மிஞ்சு; மிஞ்சினுல்கெஞ்சு.

அந்நியநாட்டு வியவகாரம் சம்பந்தமாகச் சென்ற வாரம் பார்ளிமென்றத்துப் பிரபுக்கள் சபையில் விவாதம் நிகழ்ந்தது. ஜெர்மனியின் ஆயுத ஸ்வீகாரணம் சம்பந்தமாகவே விவாதம் நடைபெற்றது. இவ்விவாதத்தில் முக்கியமாக அவதானிக்கப்படவேண்டிய விஷயம் என்னவென்றுல் ஜெர்மனியின் கடத்தையை பிரிட்டிஷ் பிரபுக்களில் ஒருவராவது உண்மையாகக் கண்டிக்கவில்லை என்பதே. நேர்மாருக விவாதத்திற் பங்கு பற்றிய பிரிட்டிஷ் மூதறிஞர்கள் ஜெர்மனிமீது தாம் அநுதாபப்படுவதாகவும், அந்நாடு செயல்களினுல் ஐரோப்பாவில் சமாதானத்தை நாட்ட முயற்சி செய்யும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் மிக்க அழகாகப் பேசினர்.

ஐரோப்பாவில் உள்ள வல்லரசுகள் தனித்தனி இவ்வளவு இவ்வளவு தரைப்படைகள் வைத்திருக்கலாம் என்பதைச் சமர்ப்பிக்க இங்கிலாந்தினுல்இப்போ தஇயலாததாகவே, ஆயுதப்பரிகரண மகாநாட்டை மாற்றிப் புநர்நிர்மாணம் செய்வது முடியாது என்று ஸ்ரான்ஹோப் பிரபு கூறினர். ஜெர்மன் சர்வாதிகாரியான ஹெர் ஹிட்லரே அக்கணக்கைச் சமர்ப்பிப்பாரானுல் மிக்க நலம் பயக்கும என்றும ஸ்ரான்ஹோப் பிரபு பலபட விரித்துரைத்தார்.

வெறிப் பானங்களை இவர்களுக்கு விற்கவொண்ணுது.

16 வயசுக்குட்பட்டவருக்கு, பைத்தியக்காரருக்கு, குடித்து வெறிகொண்டவருக்குச் சாராயம் முதலிய மதுபானங்களை விற்கவொண்ணுது. பெண்ணுய்ப் பிறந்தவளுக்குப் போத்தலாக வாங்கிக்கொண்டு போவதற்குக் கொடுக்கலாமே யல்லாமல். அங்கே நின்று குடிக்கும்படி 'சில்லறையில்' விற்கக்கூடாது. தலைமை உத்தியோகத்தர்களின் விசேஷ அநுமதியில்லாமல், கீழே சொல்லப்படுபவர்கட்கும் மதுபானத்தை விற்கவொண்ணுது.

1. அரசாங்கக் கடற்படையிலுள்ள மாலுமிகளுக்கும் போர்வீரர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்திற்கும்,

2 அவர்கள் வசிக்கும் வீட்டிலுள்ள எவருக்கும்,

3. கடமை பார்க்கும் பொலிசருக்கும், மதுப்பகுதி உத்தியோகத்தருக்கும், புகைரதப்பகுதி உத்தியோகத்தருக்கும் வெறியுண்டாக்கும் மதுபானங்களை விற்கவொண்ணுது.

குஷ்டரோகம் முதலிய தீரா வியாதிகளினுற் பீடிக்கப்பட்டவர்கள், தொற்றுநோய் வாய்ப்பட்டவர்கள், 16 வயசிற்குட்பட்டவர்கள் ஆகிய இவர்கள் மதுபானத்தைக் கொண்டுபோதல் தவறணைகளிலிருந்து விற்றலாகிய கருமங்களைச் செய்யவிடவொண்ணுது என்னுமிவைகளெல்லாம் அரசினர் மதுபான வியாபாரிசட்கு அநுமதிகொடுக்கும்போது செய்யும் நிபந்தனைகளாம்.

விளம்பரம்.

சிங்களம் படிப்பித்தல்.

யாழ்ப்பாணம் 'ஸ்ரேஷன் ரோட்டில் "குணசெவண" என்னும் இல்லத்தில் வசிக்கும் ஸ்ரீமதி G. G. நத்தாவதி, சனி, ஞாயிறு ஒழிந்த ஏனைய தினங்களில் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணிக்கிடையில் தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களத்தில் பாடம் சொல்லிக் கொடுப்பார்.

(Mis. 36. 9, 13-5-35)

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஹு
சித்திரைமீ ௩0௨ திங்கட்கிழமை.

பூசையாவதற்குமுன் சந்நதமா?

அந்நிய நாட்டிலிருந்துவரும் நெல்லிற்கு இறக்குமதித்தீர்வையை உயர்த்தவேண்டுமென்ற திருக்கோணமலை அங்கத்தவராகிய ஸ்ரீ M. M சுப்பிரமணியமவர்களின் பிரேரணை இற்றைக்குச் சிலவாரங்கட்கு முன்னர் இலங்கை அரசாங்கசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாயினும் அது இன்னும் அநுசரணைக்கு வரவில்லை. இது வரிபேற்றம் விஷயமானதால் மாதிரிமாருடைய சம்மதத்தைப்பெற்றே அநுசரணைக்கு வருதல்வேண்டுமாம். மந்திரிமார் இப்பிரேரணையைத் தள்ளுவதும் கொள்ளுவதும் யாழ்ப்பாணமக்களின் அதிர்ஷ்டம் பாவத்தைப்பொறுத்ததாகும். இப்பிரேரணை இப்பொழுது அநுசரணையி லில்லாமையால், நெல்லு அரிசியென்னுமிவையிரண்டும் இது காறுமிருந்த விலையின்படியே, விற்கப்படவேண்டியது முறையாகும். இப்படியிருக்க, இங்குள்ள வியாபாரிமார் ஸ்ரீ சுப்பிரமணியத்தின் பிரேரணையைப்பற்றிக் கேள்விப்பட்ட மாத்திரத்தே நெல்லை அதிகம் வெளியில் விடாமற் சிறிது சிறிதாக விலைகூட்டி விற்கத் தொடங்கிவிட்டனர். நெல்லின் விலை கூடவே அரிசி விலையும் சிறிது கூட்டப்படலாயிற்று.

இந்தவிதமாகவே முன்னர் யப்பான் துணிகளுக்குக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை அரசினர் விதிக்கமுந்தி, அதாவது விதிக்கப் போகின்றாரென்ற வதந்தி பிறந்தவுடன், இங்குள்ள வியாபாரிமார் யப்பான் துணிகளின் விலையை ஏற்றிவிற்கத் தொடங்கினார்கள்.

ஆனால் இந்த முறை யாழ்ப்பாணத்து வியாபாரிமார்களிடத்து மாத்திரம் காணப்படுவதென நாம் சொல்லத் துணிந்திலேம். "வேசியுறவும் வியாபாரி தன்னுறவும் — காசு பொருளிவற்றிற்காணலாம் காரிகையே" என்றபிரகாரம் உலகத்திலுள்ள வியாபாரிமார் எல்லாரிடத்தும் இது ஒரு அளவிற்கு உண்டுதான். ஆனால் யாழ்ப்பாணத்து வியாபாரிமாரிடத்து "எரிந்த வீட்டிற் பிடுங்கியது அமதி" என்ற முறையே அதிகமாகக் காணக்கிடக்கின்றது. இவர்களைப் பார்த்தே இங்கு வந்து வியாபாரஞ்செய்யும் அந்நியரும் இந்த அநியாயமான முறையைப் பின்பற்ற முயலுகின்றார்கள். ஆதலால் நம் சொந்தவூர் வியாபாரியாராகவுள்ளவர்களே; தேசாபிமானம் பற்றியேனும் இந்த அடாதமுறையைத் தவிர்த்துவிட்டு, "வரக் கொள், வர வில்" என்ற முறையில் வியாபாரம் செய்ய வேண்டும். இந்த முறையில் ஈட்டிய பொருள் உடனுக்குடன் விட்டகலாது ஒரு சந்ததி இரண்டு சந்ததிக்கு நிலைநிற்றலுங் கூடும்.

மேலும் நமது வியாபாரிமார், தங்களை வியாபார விஷயத்திற் கட்டுப்படுத்த அரசினருக்கு அதிகாரமில்லையென்று எண்ணிவிடவொண்ணாது. இவ்வக்கிரமம் அதிகப்படுமானால் மாகாண அதிகாரிகள் ஏதாயினும் கட்டுப்பாடு செய்தற்கான பிரமாணத்தைச் சனப்பிரதிநிதிகளாயுள்ளவர்கள் அரசாங்க சபையில் நிறைவேற்றுவிக்க வேண்டியேற்படும். கட்டுப்பாட்டிற்கு அமைந்து ஒரு கருமத்தைச் செய்வதைக்காட்டிலும் தாமாக ஒருவர் ஒரு கருமத்தை நினைத்துச் செய்வது விசேஷமல்லவா?

பட்லரின் "வழவழா" நியாயம்.

இப்போது அமைக்கப்படும் இந்திய அரசியற்றிட்டத்தின்படி பாரத மக்களுக்குச் சர்வஜன வாக்குரிமை கிடையாது. ஆனால் வயது வந்தவர்கள் எல்லவர்க்கும் வாக்குரிமையை அளிக்க மாகாணச் சட்டசபைகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டுமென்றும், 10 வருஷ காலத்திற்குள் அவை அப்படி யளிக்காவிட்டால், இந்திய மந்திரி அந்த உரிமையை அளிக்கவேண்டும் என்றும் ஓர் பிரிவை இந்திய அரசியல் மசோதாவில் சேர்க்கவேண்டுமென்று தொழிற்கட்சியைச் சேர்ந்த மேஜர் மில்னர் ஓர் திருத்தப்பிரேரணையைப் பாராளுமன்றத்தில் எடுத்தாண்டார்: துர் அதிர்ஷ்டவசமாக அப்பிரேரணை தோற்றுப்போய் விட்டது. இத்தப் பிரேரணையை எதிர்த்துப் பேசிய கன்ஸர்வேற்றிவ் கட்சியினர் ஒருவர் 500 வருஷங்கள் கழிந்தபின் சர்வஜன வாக்குரிமையை ஏற்படுத்தவேண்டுமென்ற திருத்தப்பிரேரணையை மாற்றிக்கொள்ளுவதாயின் தாம் அதை ஆதரிப்பதாகச் சொன்னார். இந்த மகான் இந்தியாவைப் பிரிட்டிஷார் முதுசொத்து அல்லது ஸ்ரீதனம் என்று எண்ணிக் கொள்ளுகின்றாரோ? ஆனால் இவர் கூற்றிலிருந்து பிரிட்டிஷார் இந்தியாவின் முன்னேற்ற விஷயத்தில் எவ்வளவு தாராளமாய் நடக்கின்றார்கள் என்பதையும் இந்தியாவுக்கு எவ்வளவு சீக்கிரமாகச் சுயாதீனத்தை நல்க உத்தேசித்திருக்கின்றார்கள் என்பதையும் நாம் நன்கு அறியலாகும். இவர்கள் இப்படிச் சொன்னாலும், பிரிட்டிஷ் மந்திரசபையினர் அநுபவத்தை யொட்டிக் கர்மம் ஆற்றாதது உண்மையில் வருந்தத்தக்கதே; ஷை திருத்தப் பிரேரணையை எதிர்த்துப் பேசுகையில் இந்தியா உதவி மந்திரியான மிஸ்டர் R. A பட்லர் என்பவர் கூறிய நியாயம் மிக்க விநோதமானதாயிருக்கின்றது. "இத் திருத்தப் பிரேரணையை ஏற்றுக்கொள்வது மிகவும் பிழை: சர்வஜன வாக்குரிமை ஏற்படுத்துவதால் 20 லட்சம் பவுண்கள் மேலதிகமாகச் செலவாகும்" என்பது மகான் பட்லரின் சித்தாந்தம். இந்தத் திருத்தப் பிரேரணையால் வரும் பிசகு என்ன என்று மிஸ்டர் பட்லரை நாம் கேட்கிறோம். பாரத மக்கள்-கிறீஸ்து பிறக்கப் பல்லாயிர வாண்டுகளுக்கு முன்னரேயே நாகரிகம், சீர்திருத்தம் என்பனவற்றை அறிந்த ஆரிய மக்கள், இங்கிலாந்து, பிரான்ஸ் முதலாம் மேனாடுகளில் வசித்தவர்கள் சமயம் இன்னது அரசியல் இன்னது என்பனவற்றை அறியாது தம் தேகத்தை இலைகளாலும் குழைகளாலும் மறைத்து அநாகரிகமாய்க் காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும் மிருகங்கள் போல் திரிந்த காலத்தில், அரசியலில், பொருளாதார வர்த்தகத்துறைகளில் மிகவு மேலோங்கியிருந்த இந்திய மக்கள்-தமக்களிக்கப்பட்டிருக்கும் வாக்குரிமையைத் திறம்படப் பிரயோகிக்கமாட்டார் என்பது மிஸ்டர் பட்லரின் கருத்தா? அப்படியானால் சென்ற சட்டசபைத் தேர்தலில் இந்திய மக்கள் எவ்வாறு தம் வாக்குரிமையைப் பிரயோகித்தனர் என்பதை நன்கு ஆலோசித்திருக்கலாமே.

இனி, சர்வஜன வாக்குரிமை அளித்தால் நிர்வாகத்துறையில் அதிக கஷ்டம் ஏற்பட்டு விடுமென்றும், அதிகம் செலவுபிடிக்குமென்றும் மிஸ்டர் பட்லர் கூறுகிறார். ஆனால் எமது இலங்கையில் சர்வஜன வாக்குரிமை டொனமூர் அரசியற்றிட்டத்தின்படி ஏற்பட்டிருக்கிறது. இதனால் நிர்வாகத்துறையில் என்ன கஷ்டம் ஏற்பட்டுவிட்டது? அரசினர்க்கு எவ்வளவு அதிகச் செலவு ஏற்பட்டுவிட்டது? என மிஸ்டர் பட்லரைக் கேட்கிறோம். சர்வஜன வாக்குரிமையை அளித்தால் ஏழைகளிடம் அதிகாரம் மாறிவிடும்; அதனால் ஏழை மக்களின் ஸ்தாபனமாகிய காங்கிரஸ் பிரிட்டிஷார் அதிகாரத்திற்கு உலைவைத்துவிடும் என்ற அந்தரங்க பயத்தினாலேயே மிஸ்டர் பட்லர் இந்த வழாவழா நியாயங்களைக் கூறுகின்றார். இதுவும் பிரிட்டிஷாரின் ஓர் இராஜதந்திரமே. ஆனால் இந்த இராஜதந்திரம் என்றும் நிலைநிற்காது. ஏன்? சிலரை அதிக காலத்திற்கு ஏமாற்றலாம்; பலரைக் கொஞ்சக்காலத்திற்கு ஏமாற்றலாம்; ஆனால் எல்லாரையும் எக்காலத்திலும் ஏமாற்ற முடியாது. இது உண்மை. இந்த உண்மையை மகான் பட்லருக்கு யாம் சமர்ப்பிக்கிறோம்.

வெள்ளிவிழாக்காலத்தில் ஜோகூர் சுலுத்தானுடையகொடை

ஐந்து லட்சம் பவுண்

சிங்கப்பூர்த் துறைமுகத்தில் அமைக்கப்படும் கப்பல் "யாட்"டின் வேலையைப் பூரணமாக்குதற் பொருட்டு, அரச சக்கரவர்த்தியின் வெள்ளிவிழாக் கொண்டாட்ட ஞாபகார்த்தமாக ஜோகூர் சுலுத்தான் 500,000 பவுண் அரசினரிடம் கொடுத்திருக்கிறாராம்.

கண்ணோட்டம்.

சைமன் மந்திரியின் இராஜதந்திரம்.

ஐரோப்பியமகாயுத்தத்தின்பின் ஒருவாறு ஒழுங்கு படுத்திய வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை நிகழ்ந்த சில ஆண்டுகளுக்குப் பின், ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே 'லொக்கார்னோ' உடன்படிக்கை என்னும் இன்னோர் உடன்படிக்கை முற்றுப்பெற்றது. அதிற் பங்குபற்றியன ஜெர்மனி பெல்ஜியம், பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி என்னும் நாடுகளேயாம். வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கைப்படி வகுக்கப்பட்ட தேச எல்லைகளை மீறி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் என்னும் 3 நாடுகளும் பரஸ்பரம் மாறுபட்டுத் தம் தேச எல்லைகளை விஸ்தரிப்பதற்காக போர் தொடுக்கவொண்ணாது இம் மூன்று நாடுகளிலும் ஏது இவ்வுடன்படிக்கையை மீறிப் போர்தொடுத்துத் தனது தேச எல்லையை அதிகரிக்க முயற்சிக்கின்றதோ, அதற்கு எதிராக மற்றைய நான்கு வல்லரசுகளும் போர் செய்ய வேண்டும் என்பதே இந்த லொக்கார்னோ உடன்படிக்கையின் சாரம [illegible],

சென்றவாரம் நிகழ்ந்த பாராளுமன்றத்துக் கூட்டத்தில் லொக்கார்னோ உடன்படிக்கை சம்பந்தமாகச் சில கேள்விகள் அந்நியநாட்டு மந்திரியான சேர் ஜோன் சைமனிடம் கேட்கப்பட்டன. ஜெர்மனி வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை இப்போது பலவிஷயத்திலும் மீறிவிட்டது. அது தனது தேச எல்லையை பிரான்ஸுக்கு மாறாக விஸ்தரிப்பதாயின், இங்கிலாந்து பிரான்ஸின் உதவிக்கு அந்தக் கணமே போகுமா என்று ஒருவர் கேட்டதற்கு நமது சைமன் மந்திரி கொடுத்த விடை பிரிட்டிஷாரின் இயல்பான இராஜதந்திரத்தைக் காட்டுகிறதேயன்றி, இங்கிலாந்தின் நிலைமை என்ன என்பதைத் தெளிவாய்க் காட்டுவதாயில்லை. "அப்படியான நிலைமை ஒன்று ஏற்பட்டால், பிரிட்டிஷார் என்செய்வர் என்பதை அந்த உடன்படிக்கையிலேயே காட்டப்பட்டிருக்கிறது" என்பதே சைமன் மந்திரியின் விடை. கேட்ட கேள்வி ஒன்று இறுத்தவிடை இன்னொன்று! என்னே பிரிட்டிஷ் இராஜதந்திரம்.

இப்போதுதான் புத்தி வந்ததா?

இலங்கைப் புகையிரதப் பகுதியின் நிலைமையை ஆராய்ச்சி செய்து ஏற்ற கர்மங்களைச் சிபாரிசு செய்தற்கான நிபுணரை நியமித்தல் ஆவசியகம் எனப் புகையிரதப் பகுதித் தலைவர் போக்குவரவுப் பகுதி மந்திர நிர்வாக சபையினர்க்கு அறிவித்தல் கொடுத்திருக்கிறார். இப்போது சிலவருஷ காலமாக எம் புகையிரதப்பகுதி வரவுக்கு மிஞ்சிய செலவை விழுங்குகின்றதுமன்றி இலங்கை மக்களுக்கே ஓர் சுமைகல்லைப்போல் இருக்கிறதை எவருமறிவர். இந்த நிலைமையை மாற்றுதற்கு ஓர் நிபுணரை ஏற்படுத்தி ஆராய்ச்சி செய்தல் வேண்டும் என்று நாம் பன்முறை கூறியன புகையிரதப் பகுதித் தலைவர்க்கு வேம்பாய்த் தோன்றி, தாமே எல்லாவற்றையும் சரிப்படுத்த முடியும் என்று கர்மம் ஆற்றி ஈற்றில் முடியாது என்று அலுத்துவிட்டார். 1933-ம் ஆண்டு இந்தியப் புகையிரதப் பகுதி நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி புரியவந்த நிபுணர்களிற் சிலரை இங்கு அழைத்து எமது நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்விக்க வேண்டும் என்று இங்குள்ள பத்திரிகைகள் யாவும் கதறின: அப்படிச் செய்திருந்தால் இனிச் செலவழிக்கப்படவிருக்கும் பணத்தில் 100இல் 10 உடன் எல்லாம் முடிந்திருக்கும். வெள்ளம் வந்தபின் அணைகோல முயற்சிப்பதே எமது இலங்கை அரசினரின் இயல்பாய் விட்டது. ஆயினும் இப்போதாயினும் கண் விழித்து விட்டனரே! அதுவே போதும்.

தலைமைக்காரர்.

ஊர்கள் தோறும் தலைமைக்காரரை வைத்துப் பரிபாலனம் செய்யும் முறையைப்பற்றி விசாரணை புரிந்துவரும் சங்கத்தின் முன்னர் இதுகாறும் சாட்சியம் கொடுத்தவர்களிற் பலர் இந்தமுறை மிக்க பழையது, காலத்திற் கொவ்வாதது எனவே, அதனை அகற்றவேண்டுமெனச் சாட்சியம் பகர்ந்திருக்கின்றனர். விதானைமார் உடையார்மார் எனப்படுவர்கள் தற்போதைய முறைப்படி போதிய கல்வியறிவற்றவர்களாயிருக்கின்றார்கள். கைலஞ்சம் பெறுபவர்களாயிருக்கிறார்கள் என்பதே சாட்சியம் பகர்ந்தவர்கள் இம்முறையின் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களாம். இவர்கள் கூற்றில் முக்காலே மூன்றுவீசம் உண்மையிருக்கிறதென்பதை மறுக்க மாட்டேம். இலைமறைகாய்போல் சுயமரியாதையுள்ள, யோக்கியமான தலைமைக்காரரும் இருக்கின்றனர்தான்: ஆனால் அவர்கள் சிறுதொகையினரே. அவர்களைக்கொண்டு இந்த முறை நல்லதென்று சொல்லமுடியாது. இந்த முறையை அடியோடுமாற்றிக் கிராமபரிபாலனத்தைப் போதிய கல்வியறிவுள்ளவர்கள் பொறுப்பில் விடவேண்டும் என்பதே எமது அபிப்பிராயம்.

இலங்கைச் செய்திகள்.

இலங்கையின் வியாபாரப் பிரதிநிதி.

இங்கிலாந்தில் இலங்கையின் வியாபாரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கும் டக்டர் போல் ஈ. பீரிஸ் அவர்கள், இலங்கைக் குடிசைத் தொழிற் பொருள்களுடனும் இலங்கை ஓவியக்காரரால் எழுதப்பட்ட படங்களுடனும் சென்ற புதன்கிழமை இங்கிலாந்துக்குப் பிரயாணமாயினர்.

இலங்கைப் பிரதிநிதி உள்நாட்டு மந்திரி.

உள்நாட்டு மந்திரியான சேர் D. B. ஜெயத்திலகா அவர்கள் லீவு பெற்று இங்கிலாந்திற்குச் செல்ல, சிலாபப் பிரதிநிதியான மிஸ்டர் G. C. S. கொறியா அவர்கள் உள்நாட்டு மந்திரியாகத் தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

பாராட்டுகின்றார்.

இலங்கைப் பொலிஸ்பகுதிப் பிரதித் தலைவரானவர் தலைமைக்காரர் முறையைப் பற்றி ஆராய்ச்சி புரிந்துவரும் சங்கத்தின் முன்னர் சாட்சியங் கொடுக்கையில் தலைமைக்காரர் குற்றங்களைக்கண்டு பிடிக்கும் வேலையில் பொலிசாருக்குச் செய்துவரும் உதவியைப்பாராட்டிக் கூறியதுடன், குற்றங்களைக் கண்டுபிடிக்கும் வேலையில் பொலிஸ் அதிகாரிகள் மூலம் தலைமைக்காரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஓர் திட்டத்தையும் சமர்ப்பித்தார்.

அயிரோப்பிய உத்தியோகத்தருக்கு அடியும் வெட்டும்.

3 மலையாளிகள் சிறைப்பட்டனர்.

கொழும்பு துறைமுக 'இஞ்சினிய'ர் காரியாலயத்திற் கடமைபார்க்கும் திரு. எச். ஸ்மித் என்னும் ஐரோப்பியர் சென்ற புதன்கிழமை காலை 8 மணியளவில் வழக்கம் போல் கோட்டைப் புகையிரத ஸ்தானத்திலிருந்து 'றிக்ஷோ' வண்டியில் துறைமுக 'இஞ்சினியர்' கந்தோருக்குச் செல்லும்போது, துறைமுக 'இஞ்சினியர்' பகுதியில் வேலைபார்த்துச் சமீபத்தில் மிஸ்டர் ஸ்மித் என்பவரால் வேலையினின்றும் நீக்கப்பட்ட அப்பு, சண்முகம், முகம்மத் அலி என்னும் மூவரும் வழிமறித்து இரும்புக்குழாயினாலும் கத்திகளினாலும் அடித்தும் வெட்டியும் படுகாயப்படுத்திவிட்டனராம். அவர் கொழும்பு வைத்தியசாலையில் ஆபத்தான நிலைமையிலிருக்கின்றனர். காயப்படுத்திய மூவரும் சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். திரு ஸ்மித் அவர்கள் இம்மாதக் கடைசியில் உபகாரவேதனம் பெறவேண்டியவராம்.

பெண்மணிகாள்! என்னே நம் முன்னேற்றம்?

முன்னைநாட்பொலிந்த நம் சீரும் சிறப்பும் இற்றைநாள்வந்துள்ளகேவலநிலைமை.

ஆடவருடன் போட்டியிடுவதா மரபு? அன்றேல் இல்லறவாழ்க்கையா மேம்பாடு?

(ஸ்ரீஜுத் லக்ஷ்மீநந்திரகங்குலி எழுதுகிறார்.)

பால்மணம் மாறாக் குழந்தையும் தன் தாய்க்கும் தந்தைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை நன்கு அறியும். தந்தை கோபப் பார்வை காட்டும்போது அக் குழந்தை என்ன செய்கிறது; ஓடோடியும் தாயின் மடியின்மீதேறி அவள் மார்போடு தன் தலையை அணைத்து அவள் ஆலிங்கனத்தில் தன் தந்தை கோபத்திற்கு ஒளிக்கிறது. பசிவந்தபோது "அம்மா பசிக்கிறது" என்று அக்குழந்தை அன்னையை நோக்கியே அலறுகின்றது.

ஆடவன் பலமும் அதிகாரமும் உள்ளவன்: அவன் தன்னிடம் புக்கவரைப் பாதுகாப்பதற்கான வல்லமை அவனிடம் உண்டு. பெண்ணோ கொடி. கொடி செழித்து வளர்வதற்குப் பக்கப் பலம் வேண்டும். அப் பக்கப்பலம் ஆடவனே. இதனாலன்றோ எம் முன்னோர் கவிவாணர் பெண்மணிகளை மின்னற் கொடியாள் என்று வர்ணித்துப் போந்தனர்.

ஓர் பெண்ணுக்கு இயற்கையாகவே நான்கு அணிகலன்கள் உள: அவை நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்குமாம். இவையே அவளுக்கு அழகும் வனப்பும் கொடுக்கும் விலைமதிப்பற்ற ஆபரணங்களாம். இந்த மாபெரும் உண்மையை உணராது தமக்கு இறைவனால் அருளப் பட்டிருக்கும் பூஷணங்களை நோக்காது நம் பெண்மணிகளிற் பலர் கேவலம் அழியும் தன்மை வாய்ந்த உலோகாபரணங்களையே மேலாக விரும்புவது உண்மையில் வருத்தத்திற்கு இடமானதே.

நம் நாட்டுப் பெண்மக்கள் தாம் புராதன காலத்தில் வகித்திருந்த உன்னத நிலைமையை மறந்து விட்டனர். "இல்லாள்" — அதாவது மனைக்கரசியாய்க் குடும்பத்தினரால் "சக்தியின் அம்சம்" என வணங்கப்பட்டிருந்த மகோன்னதநிலைமையை நம் ஹிந்துப் பெண்மணிகள் மறந்து விட்டனர். அக்காலத்தில் நம் பெண்மணிகள் ஜனசமூகத்தில் வகித்திருந்த நிலைமை தைவிகமானது. தற்போதைய போலி நிலைமையிலும் பார்க்கப் பலகோடி மடங்கு சிறந்தது. ஆனால் அந்தோ! இப்போது நம் நாட்டுப் பெண்மணிகளின் நிலைமை என்ன? மிகவும் கேவலமாய் விட்டது. அவர்களின் தைவிகத் தன்மைக்கு ஏதுவாயிருந்த நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, அன்பு, பெண்மை என்பன மலையேறி விட்டன. அக்காலத்தில் ஆடவர் கண்கள் பெண்களின் பாதங்களையே நோக்கின. இப்போதோ, அவர்களின் மேனியையும் வதனத்தையும் நோக்குகின்றன. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தற்காலப் பெண்களின் மேனி மினுக்கும் உடை வனப்பும் ஆடவர் கண்களை அவ்விடங்களுக்கு வசீகரிக்கின்றன.

நம் பெண்மக்கள் கீழ் நிலைமையை எய்தி விட்டனர்: தம்முடன் எமது சமூகத்தையும் கீழ்க்குக் கொண்டுவந்து விட்டனர், பெண்களின் வீழ்ச்சியால், எமது நாகரீகம், எமது மேன்மை, யாவும் வீழ்ச்சியடைந்தன. காலசக்கரச் சுழற்சியினால் இது நிகழ்கின்றது எனச் சிலர் கூறலாம். அதுவும் ஒருவாறு உண்மையே என்பதை யான் மறுக்கவில்லை, ஆனால் அக் காலச்சக்கரத்தின் வேகத்தில், ஆடவனிலும் பார்க்கப் பெண்ணே தீவிரமாக அகப்பட்டு விட்டாள் என்பதே எமது சித்தாந்தம்.

இப்படி, பெண்கள் நிலைமை மாற்றம் அடைந்து விட்டதே! இதன் லட்சியம் என்னவென்றால், பெண்கள் விடுதலை, பெண்கள் முன்னேற்றம் எனக் கும்மாளம் போடுகிறார்கள். ஐயோ முன்னேறுவதற்கு வேறுவழியில்லையா? இந்த முறை பெண்மையை அறவே ஒழித்துவிட்டதே!

தற்காலப் பெண், தனது உண்மைத் தன்மையை மறந்து விட்டாள். தான் முன்னாள் வகித்திருந்த நிலைமை என்ன என்பதைப்பற்றி யோசிக்காது 'முன்னேறுகின்றாள்'' அவள் யோசிப்பாளேயானால், நந்தவனத்தில் சோபிதமாய் விளையாடிக்கொண்டிருந்த தேவதையானது தான் இப்போது வனாந்தரத்தில் ஓய்வற்றுச் சாந்தியற்று அலைந்து திரிவதாகக் காணுவாள்.

தற்கால முறையிற் கல்வி பயின்ற பெண் விவாகம் என்பதையும் ஒருவாறு வெறுக்கிறாள். புருஷன் [illegible] பிள்ளைகள் இவையெல்லாம் சுமைகள் என அவள் எண்ணுகிறாள். விவாகம் என்பது பழைய மூடச் சம்பிரதாயம் என அவள் நினைக்கிறாள். ஏன் புருஷன் வேண்டும்? புருஷன் இல்லாமல் தானே உழைத்துச் சீவியத்தை நடாத்த முடியாதா? என்று தற்காலப் பெண் எண்ணுகிறாள். இதைச் சாதனையிற் பல தற்கால நாரிமணிகள் காட்டி வருகின்றனர்.

ஆனால் அவள் சந்தோஷமுறுகின்றாளா? அவள் வாழ்க்கை இன்பமாய் இருக்கின்றதா? உழைப்பதும் சீவியத்தைக் கழிப்பதும் தானா வாழ்க்கையின் லட்சியம்?

அவள் சந்தோஷமடையவில்லை என்றே நாம் கூறுகிறோம். பணத்தினால் மாத்திரம் ஓர் ஆடவன் சாந்தியடையலாம். ஆனால் ஓர் பெண் சாந்தியடையமாட்டாள். உண்மையான இல்வாழ்க்கையே பெண்ணுக்குச் சந்தோஷம் பயப்பதாகும். விவாகமான பின்னரேயே ஓர் பெண்ணின் சீவியம் சந்தோஷம் பயப்பதாகும். உண்மையான இல்வாழ்க்கையை அநுபவித்த எப் பெண்ணுக்கும் பெண்கள் விடுதலை பெண்கள் முன்னேற்றம் என்னும் தற்போதைய பல்லவிகள் பைத்தியகாரர் பாட்டுக்களாகும்.

மற்றவர்களுக்காகத் தான் அன்புடன் துன்புறுதல் ஓர் ஆநந்தம். இந்த ஆநந்தத்தை இல்லாள் அநுபவிப்பாள். அவளே ஆடவனுக்குத் துணை: அவனது இன்ப துன்பங்களில் தானும் சுயநல விருப்பின்றிப் பங்குபற்றி உண்மை இன்பத்தினை அநுபவிக்கிறாள். வீரப் புதல்வர்களை அவளே பெற்று அவர்களை மார்போடும் தோண்மேலும் சுமந்து பாலூட்டி தாலாட்டி அளவற்ற இன்பம் அநுபவிக்கிறாள்.

பெண்களின் தற்போதைய வீழ்ச்சிக்கு இப்போது ஊட்டப்படும் கல்வி முறையே காரணம் எனக் கூசாது உரைக்கலாம். தற்போது ஊட்டப்படும் கல்வி முறை பெண்களின் பெண்மையைக் கெடுத்து விட்டது. "விடுதலை முன்னேற்றம்', என்பவற்றிற்குத் தற்போதைய பிரதிநிதிகள் பிழையான அர்த்தங்களைக் கூட்டி விட்டனர். விடுதலை முன்னேற்றம் என்றால் இல்லறத்தை விடுத்துக் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் அதன் மூலமாகச் சமூகத்திற்கும் தேசத்திற்கும் செய்ய வேண்டிய கடமையை விடுத்து, இயற்கைத் தன்மையைத் துறந்து ஆடவருடன் போட்டியிட்டுச் சட்ட மன்றங்களிலும் நியாயச் சபைகளிலும் ஏறி விவாதம் புரிவதல்ல:

இப்படி நாம் கூறுவதானால், அநேகர் எம்மைக் குறை சொல்வர், திட்டுவர், எம்மீது வசைமாரி பொழிவர்:

பெண்மக்காள், முன்னேறுமின்! ஆனால் நீவிர் கைக்கொள்ளும் முறையோ நாசம் விளைப்பதாகும். முன்னேற்றத்திற்கான நல்வழியைக் காட்டுவதற்கு இறைவனே திருவருள் பாலிக்க வேண்டும்.

கோகிலா கண்ட அற்புத மருந்து

4-ம் பக்கம்.

பத்திரிகை முழக்கம்.

புத்தகாயாப் பிரச்சினை:

சென்னை இராமக் கிருஷ்ண மடத்தாரால் பிரசுரிக்கப்படும் "வேதாந்த கேசரி" என்னும் மாத வெளியீடு, புத்தகாயாவைப் பௌத்தர் தமது அதிகாரத்தில் விடவேண்டுமென்று கேட்பதைக் கண்டித்துப் பின்வருங் கருத்துப்பட எழுதுகிறது:

> "புத்தகாயா பௌத்தர்க்கு எவ்வளவு பரிசுத்தமானதாயிருக்கிறதோ, அவ்வளவு பரிசுத்தமானதாய ஹிந்துக்களுக்கும் உளது. ஹிந்துக்களும் புத்தபிரானின்போதனைகளைக் கைக்கொள்ளுகின்றனர்தாமே. மகந்து என்னும் ஹிந்துவின் பரிபாலனத்தின்கீழ் புத்தகாயா வருமுன், அது 1500 வருட காலமாகப் பௌத்தரின் பரிபாலனத்தின்கீழ் இருந்தது எனப் பௌத்தர் வாதிடுகின்றனர். ஆனால் தம் பரிபாலனத்தின் கீழ் இருந்த ஆலயத்தை முஸ்லீம் படையெடுப்பின்போது, ஏன் பௌத்தர் கைவிட்டனரென நாம் கேட்கிறோம். இவ்வாலயத்தை ஓர் பர்மிய அரசர் திருத்திப் புதுக்குவித்தபடியாலும், அது பௌத்தருக்குச் சேரவேண்டும் எனக்கேட்பதும்பிழை. இப்போது அநேக ஆலயங்களைப் பலர் பழுதுபார்க்கின்றனர். அப்படிப் பழுது பார்ப்பதினால் அவர்களுக்கே அக்கோவில் சொந்தமாய் விடுமா?"

இங்கிலாந்தும் ஜெர்மனியும்.

பிரிட்டிஷ் அரசியல் வாதிகள், ஐரோப்பாவில் யுத்தமேகம் குவிந்திருக்கும் இந்தச் சமையத்தில் ஒருதலை சாராத கர்மம் ஆற்றுவதை கொழும்பு "டேயிலிநியூஸ்" பாராட்டுகிறது. இன்னும் அப்பத்திரிகை பின்வரும் கருத்துப்படக் கூறி முடிக்கின்றது

> "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் உள்ள தனது நாடுகள் எல்லாவற்றினதும் ஆதரவுடன் இங்கிலாந்தானது ஐரோப்பாவிற் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான ஆராய்ச்சிகளைத் தன்னாலானமட்டும் செய்யும் என நாம் காத்திருக்கலாகும். சர்வதேசசங்கம் தான் தற்போதைய குழப்பத்தைச் சமாளிக்கமுடியும் என்று, இங்கிலாந்து பூரணமாக அபிப்பிராயம் கொள்ளுகிறது. இங்கிலாந்தின் சமரச மனப்பான்மை ஐரோப்பாவில் யுத்தவெறி பிடித்தவர்களையும் அதிகார வாஞ்சை பிடித்தவர்களையும் அடக்கிச் சமாதானத்தைக் கொண்டுவரும் என நாம் காத்திருக்கின்றோம். யுத்தத்திலும் பார்க்கச் சமாதானமே ஓர் நாட்டிற்கு நன்மைபயக்கும் என்பதனையும் யாம் ஈற்றில் ஜெர்மனிக்குச் சமர்ப்பிக்கின்றோம்."

கடிதம்.

வடமாகாணப் பிரதிநிதிகளும் அரசாங்கசபையும்.

இந்துசாதனப் பத்திராசிரியர் அவர்கட்கு:

ஐயா,

இன்னும் 6 மாதம் முடிந்ததும், நமது அரசாங்கசபைத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. அப்போது நாம் யார் யாரைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டும் என்னும் பிரச்சினை இப்போதே பலர் மனதையும் கவர்ந்திருக்கிறது என்று கூறல் பிழையாகாது இதுவிஷயத்தில் நாம் சிந்திக்கற்பால தொன்றுண்டு. இப்போது வடமாகாணத்தில் பிரதிநிதிகளாய் ஐவர் அரசாங்கசபையில் வீற்றிருக்கின்றார்களே, இவர்கள் இதுகாறும் ஆற்றிய கருமங்களிலிருந்து இவர்கள் மீண்டும் அரசாங்க சபைப் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தனுப்பப் படுதற்கு அருகரோ என்பதைப்பற்றிச் சிந்தித்தலே எனக. இந்தப் பஞ்சவர்களில் ஒருவர் இருவரை யொழிந்த ஏனையோர், தாம் செய்த தேர்தல் வாக்குத்தத்தங்களினின்றும் பிசகி, தாம் அரசாங்கசபைக்கு அனுப்பப்பட்ட நோக்கத்தை மறந்து, இராஜவிசுவாசப் பல்லவிபாடி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத் தாம் தூண் எனநிற்கவேண்டுமென்று விரும்பினார்கள் என்பதை எவரும் மறக்கமுடியாது. ஜப்பானியத்துணி இறக்குமதிக் கட்டுப்பாட்டு விவாதத்தின்போது, இப்பஞ்சவரிற் பிரதானமான இருவர் பிரிட்டிஷார் செய்வதே சரி, அவர்கள்பால் உள்ள இராஜவிசுவாசத்தை இந்தச் சந்தர்ப்பத்திற்றான் நாம் காட்ட வேண்டும் எனத் துள்ளித் துள்ளிப் பேசி, வீட்டெரிக்கும் இராஜாவிற்குக் கொள்ளி எடுத்துக்கொடுக்கும் மந்திரிகள் என நின்றமையை இவ்வளவுசீக்கிரத்தில் யாம் மறந்துவிடமாட்டோம்.

தமிழர் முன்னைய உன்னத நிலையைப் பெறவேண்டுமானால், தமிழர்களிலும் வாக்குவன்மை யுள்ளவர்கள் இருக்கின்றார்கள், இராஜதந்திரமுடையவர்கள் இருக்கிறார்கள், அரசியல் ஞானம் படைத்தவர்கள் இருக்கிறார்கள், பொருளாதார நிபுணர் என்பதைத் தொன்மைபோலச் சிங்களச் சகோதரர்க்குணர்த்தவேண்டுமானால்நாம் கூடிய அளவு அப்படிப்பட்டவர்களையே போட்டியின்றி அனுப்ப முயற்சிசெய்தல்வேண்டும்.

ஸ்ரீமான் வை. துரைசுவாமி, திரு சு. நடேசபிள்ளை, மிஸ்டர் H. A. P. சந்திரசேகரா, டக்டர் T. ஐஸக் தம்பையா, ஸ்ரீ க. பாலசிங்கம், ஸ்ரீ சு. இராஜரத்தினம் என்பவர்கள் அரசாங்கசபையில் தமிழ்ப் பிரதிநிதிகளாக இருப்பின், தமிழ்ச்சாதியத்தார் தொன்மைய உன்னதநிலையை அடையமாட்டார் என எவர்தான் கூறுவர்?

இங்ஙனம்,

கண்டி. பொ. இரத்தினசிங்கம்.

முகாந்திரம் ஸ்ரீ S. கந்தையா

உற்சாகமான வரவேற்பு வைபவம்

(நமது நிருபர்)

அரசர்பிரான் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது முகாந்திரப் பட்டம்பெற்ற தமிழ்க் கல்வி மேற்பார்வைத் தலைவராயிருந்து இளைப்பாறிய ஸ்ரீ சி. கந்தையா அவர்களை வரவேற்பதற்காக யாழ்ப்பாணம் புகையிரதஸ்தானத்தில் சென்ற புதன்கிழமை காலை 7 மணியளவில், பன்னூற்றுக்கணக்கான நண்பர்கள் நின்றனர். ஸ்ரீமான் K S. அருள்நந்தி M. Sc (தலைமை வித்தியாதரிசி, ஸ்ரீமான் S U சோமசேகரம் B A. (Lond Hons Dip Ed) வித்தியாதரிசி, முதலியார் G சுப்பிரமணியம், முதலியோரும் வித்தியாதரிசிகளும் அவர்களிற் பிரதானமானவர். புகையிரதத்தில இருந்து முகாந்திரம் ஸ்ரீ கந்தையா இறங்கியதும் ஸ்ரீமான்கள் K. S அருள்நந்தி, V மருதப்பு, V தாமோதரம்பிள்ளை, A நாகராஜா என்பவர்கள் தனித்தனி அவர்க்கு மாலையிட்டனர்.

பின்னர் நல்லூர்க் கந்தன் ஆலயத்திலிருந்து ஸ்ரீ கந்தையா மேளவாத்தியசகிதமாக நல்லூரில் உள்ள தமது இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே, வந்திருந்தவர்களுக்குச் சிற்றுண்டி, தேநீர் பரிமாறப்பட்டது. பின்னர் முதலியார் G. சுப்பிரமணியம், ஸ்ரீமான்கள் K. S. அருள்நந்தி, A. M. தோனியல்ஸ், முகாந்திரம் கணபதிப்பிள்ளை என்பவர்கள் ஸ்ரீ கந்தையா அவர்கள் விசேஷமாகக் கல்வி உலகிற்குச் செய்த அரும் பெரும் நன்மைகளைப்பற்றியும் அவரது குணங்களைப்பற்றியும் குறிப்பிட்டனர். ஸ்ரீ கந்தையா ஷெ வாழ்த்துரைகளுக்குத் தக்க பதிலுரைத்தபின் கொண்டாட்டம் மங்களகரமாக முடிவுற்றது.

(ஸ்ரீ S. கந்தையா)

நமது சிறுகதைப் பகுதி.

காதல் தூய்மை அல்லது கோகிலாகண்ட அற்புதமருந்து

"யுவன்" வரைவது.

"இராஜன் எம் ஏ" எனத்தபாற்காரன் கூப்பிட, 'இதோ வந்துவிட்டேன்' எனப் பதிலுரைத்துக் கொண்டே ஓடோடியுஞ் சென்று தனக்கெனக் கொடுக்கப்பட்ட கடிதத்தைப் பெற்றுக் கொண்டான் அப்பெயர்கொண்ட வாலிபன்.

வெகு ஆவலுடன் அக்கடிதத்தைப் பிரித்துப் படித்த இராஜன் அடுத்த நிமிடம் தெருத்திண்ணையில்மரம்போலச்சாய்ந்தான்.

பின்பு ஒருவாறு தெளிந்து, அவன் விழித்தான்; எனினும் அவன் மனத்துடிதுடிப்பு நின்றபாடில்லை.

எண்ணங்கள் பலப்பல அவன் மனத்திலே உதித்து மாறியன; தன் மனைவிக்குத் தான் இழைத்திருந்த இன்னல்களும் ஞாபகத்திற்கு வந்துவந்து மறைந்தன.

தான் செய்த கொடுமைகளுக்கெல்லாம் ஆண்டவன் தண்டனை சரியாகவே விதித்துவிட்டான் என்று எண்ணினன் அவன்.

அப் பட்டதாரியினுடைய இக்கோலத்திற்குக் காரணம் யாதெனில் அக் கடிதத்தில் வரையப் பெற்றிருந்த கீழ்க்காணும் வாக்கியங்களே!

"...........கோகிலாவின் தற்போதைய தேகநிலை மிகவும் மோசமாய் இருக்கிறது அவள் என்ன வியாதியால்தான் கஷ்டப்படுகிறாள் என்பதை டாக்டர்களாலேயே இன்னும் கண்டறிய முடியவில்லை; இவ்வளவு தேக அசௌக்கியத்தினிடையே கோகிலா, சதா உன் நினைவாகவே இருந்து உன்னைப்பற்றியே அடிக்கடி விசாரிக்கிறாள் ...."

மேற் சொன்னவாறு இராஜன் வருத்த முற்றுத் தெருத் திண்ணையில் வீற்றிருக்குங்கால் அவன் அன்னை அங்கு சென்று அனைத்தையும் அறிந்தாள்; இங்ஙனங் கொண்டாள்; "கேட்போர் பேச்சைக் கேட்டு மனம்போன போக்கெல்லாம் நடக்காதே என நான் எத்தனையோ தடவைகள் எச்சரித்தும், உன் மனைவியிடம் அநாவசியமாய் வெறுப்புக் கொண்டு இருந்தாயே. தற்போது தெய்வ சங்கல்பம் எப்படி இருக்கப் போகிறதோ" என்று கடிந்து பேசினாள் தனது மகனை.

* * *

கண்டவர் கண்டபடி இராஜனின் நடத்தைமேல் தப்பபிப்பிராயங் கொண்டனர். உண்மையில் இராஜனுக்கு அவன் காதலிமீது எள்ளளவும் வருத்தங் கிடையாது. அதற்கு மாறாக அவளை அவன் முன்னரிலும் பார்க்க நேசித்தான் அவன் பகைமைக்கும் வெறுப்பிற்கும் பாத்திரமாயிருந்தவர் பெண் கொடுத்த மாமன் மாமியரே!

காரணமில்லாது காரியம் நடக்காது; அவனுக்கும் அவர்கள்மேல் உண்டான மனஸ்தாபத்திற்கும் காரண மில்லாது போகவில்லை.

இராஜனுக்குக் கலியாணம் நடந்தேறிய அவ்வருடக் கடைசியில் அவனதன் உத்தியோகம் சம்பந்தமாக வேதபுரியிலிருந்து சென்னைக்குப் போகவேண்டி இருந்தது அப்போது அவன் தன மனைவியின இஷ்டப்படி அவள் தாயகமாகிய இண்டிவனத்தில் விட்டுத் திருப்பிச் செல்லுங்கால் அழைத்துச் செல்வதாக உரைத்துச் சென்னைக்குச் சென்றான்.

எக்காரணம் பற்றியோ அவன் அவ்வாறு செய்யவில்லை. ஆனால் உடனே அவளை அழைத்துக் கொண்டுவந்து விட்டுவிட்டுச் செல்லும்படியத் தன் மாமனுருக்கு அவன் ஓர் கடிதம் எழுதினன். அவர் அவனையே அழைத்துச் செல்லுமாறு பதில் போட்டார். இப்படியே கடிதப் போக்குவரத்து நடந்தபோது தான் இறுதிக்கடிதத்தில் இராஜன், 'அப்படியானால் உங்கள்பெண்ணை உங்களிடமே வைத்துக்கொள்ளுங்கள்" எனக் கோபத்தில் எழுதிவிட்டான். இச்சந்தர்ப்பத்தில நாரதமுனிகள் சிலர் தோன்றி, சாதாரண பிணக்கைப் பகைமையாக்கிவிட அது வருடக்கணக்காக வளர்ந்தது.

* * *

இராஜன் கடிதத்தைப்பார்த்ததும் அவனுக்கு அவன் மாமன்மாமியர் பேரில் இருந்த பகைமையெல்லாம் பஞ்சாய்ப் பறந்தது. எதையும் பொருட்படுத்தாது அவன் 'ஈசன் தண்டனைக்கு "உயிர்ப் பிச்சை கொடுத்தால் அதுவே எல்லாவற்றையும் விடப்பெரியது" என நினைப்பானாயினன்.

அவன் தன்னுடைய காரியாலய அதிகாரிக்கு ஓர் கடிதம் லீவுக்காக எழுதிப் போட்டுவிட்டு அந்தப்புகையிரதத்திலேறித் இண்டிவனத்திற்குச் சென்றான்.

எலும்பும் தோலுமாய்க் காணச் சகியாத ஓர் கோலத்தில் அவன் கோகிலத்தைக் கண்டான். அவளும் அவனைக் கண்டாள்; மறு நிமிடம் இருவரும் கண்ணீர் விட்டனர் பின்னர் ஒருவாறு தேறினர்

தெய்வக் கிருபையாலோ, அல்லது இராஜனின் அதிர்ஷ்டத்தாலோ வேறு எதனாலோ மெல்லமெல்ல வாய்க் கோகிலா குணமடைய ஆரம்பித்து விட்டாள். அம்மாறுதலைக் கண்ட எல்லோரும் சந்தோஷித்தனர் வெகு நாட்களாக மன நிம்மதியைப் பெறாத கோகிலா அதையும் பெற்றாள்.

* * *

அடுத்த முறை டக்ரர் நோயாளியைப் பார்க்கச் சென்றதும், அவள் பூரண சுகமடைந்திருந்ததைக் கண்டு ஆநந்தமடைந்து "என் மருந்தின் வேலையைப் பார்த்தீர்களா? கைவிடப்பட்ட "கேஸையும்" உயிர்ப்பித்து விட்டது என்று சொல்லிப் பெருமை யடித்துக் கொண்டார். அச்சமையம் கோகிலாவின் தாய் தந்தையரும் இராஜனும் அங்கிருந்தனர் டக்ரர் உரைத்தவற்றைக் கேட்ட கோகிலா உடனே தன் தலையணையை மிதத்தி அங்கே பத்திரமாய் வைத்திருந்த மருந்துப் பொட்டலங்களையெல்லாம் எடுத்து டக்ரர் முன் சமர்ப்பித்து 'ஐயா டக்ரர் அவர்களே! தாம் இதுவரையிலும் எனக்குக் கொடுத்த எல்லா மருந்தும் சரியாக இருக்கிறதா, எண்ணிப் பாருங்கள்" என்றாள்.

"என்ன, கொடுத்த மருந்துகளை நீ உட்கொள்ள வில்லையா? அப்படியானால் உன் நோய் எப்படி யாரால் குணமாகப் பட்டது" என்று ஓர் கேள்வியைப் போட்டார் அந்த டக்ரர்.

கோகிலா அப்போது தன் கணவனைச் சுட்டிக் காட்டினாள். "என நாயகனை அதிக நாட்களாகப் பிரிந்திருந்ததால் எனக்குண்டான மனோ வியாகூலம் என்ற வியாதிக்கு ஆ காதல் என்ற மருந்தைக் கொடுத்து என்னை மரணத்திலிருந்து காப்பாற்றிய டாக்டர் பட்டம் பெறாத வைத்தியர் இதோ இருக்கிறார் பாருங்கள்" என்றாள் காதற் கழஞ்சியம் கோகிலா!

AUCTION SALE.

கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 7073

புன்னாலைக்கட்டுவன் முத்துவேலு செல்லப்பா
—வழக்காளி

எதிர்.

புன்னாலைக்கட்டுவன் காசு செல்லு பண்டாரம் காசியின் பிரதிநிதியாக பண்டாரம் சங்கரப்பிள்ளை
—எதிராளி

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் 7073ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1935 ௵ ஆனிமீ 6௨ வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பெருந்த ஏலத்தில விற்கப்படும்.

காணி விபரம்.

1. ஏழாலை இறை "பயத்தங்கேணியடி" பரப்பு நிலை 14¼ குளம் ஆட்சியின்படி பரப்பு நிலை 15 செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும் வடக்கு எல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் எல்லைகிழக்கு ஒழுங்கையும் கயிலாயர் வயித்திலிங்கமும் பங்காளரும் மேற்கு சின்னவாசகம் பெண் லெட்சுமியும் தெற்கு ஒழுங்கை இதுமுழுவதிலும் சொரியலாய் [illegible] பங்கு.

2. புன்னாலைக்கட்டுவன் இறை 'கற்கறை பரப்பு 18¾ செய்பயிரும் வான்பயிர்களும் வடலிகளும் வீடுகளும் எல்லைகிழக்கும் வடக்கும் ஒழுங்கை மேற்கு கதிரவேலு அன்னமுத்தும் வயிரவி உடையாரும் தாயிமுத்து பெண் சிதம்பரமும் தெற்கு தம்பி முத்து பெண் சிதம்பரமும் பெண் செல்லாச்சியும் பங்காளரும், இது முழுவதிலும் சொரியலாய் [illegible] லொருபங்கு

யாழ்ப்பாணம், 1935 ௵ வைகாசிமீ 5௨

மோசேசு, பொன்னப்பாவும்.

Mis 48, 13 5 35. கொம்மிஷனர்.

அரசாங்க அதிகாரிகளும் கவர்ன்மெண்டு மந்திரிகளும் தலைமைவகித்து நடத்திய பற்பல மெடிக்கல் கான்பரன்ஸ்களில் பதாதர தேக அவுஷதங்களைத் தங்க மெடல்களும், வைத்தியபதி, வைத்திய ஆசிரியர் பட்டங்களும் பெற்றிருப்பதோடு இதர பெருட்காக்ஷி சாலைகளிலும் மருந்துகள் வைக்கப்பட்டு மெரிட் சர்ட்டிபிக்கெட்டும் தங்கமெடல்களும் பெற்றிருக்கிறது.

பாரத நாட்டில் பழமையும் முதன்மையும் பெற்ற வைத்தியசாலை இதுவே.

தாதுபுஷ்டிக்கும், ஆண்டன்மைக்கும், இரத்த விர்த்திக்கும் சி. எம். சாமி, மன்மத குளிகை:—இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆடவர்களை வசீகரிக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனமகிழ திருப்திபண்ணும் மாண்பு வாய்ந்ததென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன். இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, இளைப்பு தாகம் முதலியவைகளை நீக்கும். 20 குளிகை விலை ரூபா 2.

கோர்ப்ப எண்ணெய்:—இது ஸ்திரீகள் சஞ்சீவி யென்று சொல்லலாம். மாதாந்தர வயிற்றுவலியை உடனே நிறுத்தும், சரியாய்ப் பஹிஷ்டையாகும், கெர்ப்பாசயம், கிணப்பை, இவைத்திலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். மிக்க அனுபவமானது. புட்டி 1க்கு விலை ரூ 2—0—0

பிரமேக நிவாரணி:—எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்டதாலும் இதில் நிச்சயமாய்த் தீரும். பிரமேகம், இரத்தமேகம், தந்திமேகம், வெட்டை, நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, குத்தல், எரிச்சல், நீரடைப்பு, முதலியன மூன்றுவேளையில்குணமாகும். புட்டி1க்குவிலை ரூ. 2·0 0.

மாந்திரீக சத்து:—மஹானருள் ல் உலகமெக்கும் கீர்த்திவாய்ந்த இச்சத்தை அணிந்துகொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்த காரியசித்தி, புத்திரசந்தானம், உத்தியோகவுயர்வு உண்டாகும். இன்னும் செய்வினை பேய் பிசாசு குழந்தைகளுக்குண்டாகும் பிணி, நிழல்சாயல் முதலியன நீக்கும். மறுபடி அணுகாது.

புட்டி 1க்கு விலை ரூபா 2—0—0. தபால்சார்ஸ் வேறு.

(Q. 49. 9-5 to 8-8-35.) மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமான சாமான்கள்.

ஜேர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo

Telephone No. 30.

(Y. 201. 8-2—7-2 36)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டனச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் வண்மேற்கு கொட்டடி மா. கு. தெண்டாயுதபாணி என்பவரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

	நம்.	தே.	ரூ. சத.	பெயர். ஊர் நகைகளின் விபரம்
	டிசம்பர்மீ 1933.			
I	10326	25	25 03	அ சபாபதி பொலிஸ்டேசன் கல்தோடு 2
	ஜனவரிமீ 1934.			
J	118	5	11	ப இராசா நாவாந்துறை கல்தோடு 2
	மார்ச்சுமீ			
	1573	3	40	வி பொன்னையா கல்முனை பூரான் அட்டியல் 1
	1723	13	15	உ முகம்மது இஸ்மயில் சோனகதெரு கல் மோதிரம் 2
	1973	24	10	அ சின்னப்பு தொல்புரம் மூடி இல்லாத அச்சரக்கூடு 1
	2107	30	7	அ இராசா நாவாந்துறை மோதிரம் 1
	ஏப்பிரில்மீ			
	2150	1	25	மு மீ முகைதீன்சாய்பு சோனகதெரு அறுக்குத்து 16
	2177	2	9	வி வேலாயுதம் கரம்பன் கல் கடுக்கன் 2
	3193	2	10	வ அந்தோனிப்பிள்ளை நாவாந்துறை கல்தோடு 2
	2231	3	110	கா முகம்மது இப்ருகிம் சோனகதெரு ஐந்தட்டு மணிக்கோர்வை 1
	2234	4	12	வி முகம்மது மீருசாய்பு சோனகதெரு மணிக்கோர்வை 1
	2235	4	10	வி சின்னையா நவாலி கல்தோடு 2
	2261	5	11	அ சின்னத்துரை நாவாந்துறை கல் தோடு 2
	2311	9	7	க செல்லப்பா திண்ணவேலி அச்சரக்கூடு 1
	2327	9	9	ச சேகு முகைதீன் சோனதெரு கல்முச்சி 4
	2381	11	12	க ஆறுமுகம் மண்டைதீவு குப்பிக் கடுக்கன் 4
	2410	12	130	கா நாகமுத்து மண்டைதீவு அரைப்பவுன் 2, கூடு இரண்டுடன் ஓட்டுக்கொடி 1
	2425	12	60	த கந்தையா புத்தூர் பூரான் அட்டியல் 1
	2433	12	22	வ கந்தையா அராலி இறுகாப்பு 2
	2450	14	6 50	வி செல்லப்பா தெயிலடி குப்பி 2, காதப்பு 2
	2465	15	10	மு முகம்மது அப்துல்காதிறு சோனகதெரு மணிக்கோர்வை 1, முடிச்சு அறுக்குத்து 1
	2477	15	10	மீ சாகுல்கமீது சோனகதெரு மணிக்கோர்வை 1
	2497	16	15	தொ இராசம்மா நாவாந்துறை கல்தோடு 2
	2511	17	25	மு மீருசாய்பு சோனகதெரு கைச்சங்கிலி 1
	2515	17	15	செ அப்துல்லா சோனகதெரு பதக்கம் 1
	2535	17	15	ஆ நடராசா கொட்டடி கடுக்கோர் 1
	2576	19	12	க இராமுப்பிள்ளை கல்முனை கல்தோடு 2
	2624	21	12	P E David மிருசுவில் கடுக்கோர் 1
	2647	23	80	கா மாணிக்கம் செட்டி கடையர் கடுக்கோர் 1 பதக்கம் 1 கல்தோடு 2, மோதிரம் 1
	2676	24	50	V M முகைதீன் தம்பி சோனகதெரு கயிற்றுத்தாலி 1
	2678	24	6	அ சுபிபுமுகம்மது சோனகதெரு பூரான்திரம் 1 அறுக்குத்து 4
	2687	24	18	செ மக்கலி நாவாந்துறை நாகபடம் 2 குப்பிக்கடுக்கன் 2
	2714	25	18	ச முத்தப்பிள்ளை கொட்டடி கல்தோடு 2
	2732	26	22	வ வி கணபதிப்பிள்ளை வேலணை இறுகாப்பு 2
	2754	27	30	க அசனுலெவ்வை சோனகதெரு கல்மோதிரம் 2
	2789	29	12	கல் சுபிபுமுகம்மது சோனதெரு மணிக்கோர்வை 1
	2796	30	15	தா பக்கீர்முகம்மது சோனகதெரு குண்டுடன் பவுண் 1
	மேமீ			
	2834	1	7	ல லக்குலால் மண்டி 1 மோதிரம்
	2837	1	16	மு அசனுமரக்காயர் சோனகதெரு அறுக்குத்து 10
	2853	2	50	அ மீருமுகைதீன் சோனகதெரு அறுக்குத்து 26
	2854	2	350	எம். சலமன் கரையூர் நக்கனம் எருடன் கோர்வைக்கொடி 1
	2861	2	21	வ கதிராமு மண்கும்பான் இறுகாப்பு 2

விற்பனவு: யுவவருஷம் வைகாசிமாதம் 15ந் திகதிக்குச் சரியான மே 28 திகதி எடுபடாதனவை பிரசித்தமான மீதுதி மேற்படியாரிடம் பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

வி. வேலுப்பிள்ளை உடையார்,
கொத்திக்கேய்க்கர்.

(Mis 58 13 & 16-5-35)

உள்ளூர்ச் செய்திகள்.

—):×:(—

பையனின் துணிகரக் களவு.

வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலுக்குச் சமீபமாக வசிக்கும் சுப்பிரமணியப் பத்தரின் பட்டறையிற் குறைவேலையில் இருந்த காதோலை ஒன்றை இராசையா என்னும் 12 வயதுச் சிறுவன் சென்ற வியாழக்கிழமை ஷை பத்தர் இல்லாத சமயம் பார்த்து அபகரித்துக் கொண்டோடுகையில், காற்சந்தியிற் காவல் புரிந்த பொலிசாற் சிறையாய்ப் பொலிஸ்தானத்திற்கு அனுப்பப்பட்டான். இப்பையன் அச்சுவேலியில் வசிப்பவனும்.

இன்னோர் விவாக நீக்க வழக்கு

சுண்டிக்குளி மிஸ்ரர் ஜோஸப் மனுவல் என்பவரின் மனைவி சென்ற வியாழக்கிழமையன்று தமது கணவனுக்கெதிராக ஓர் விவாக நீக்க வழக்குத் தொடர்ந்திருக்கிறார். இவர் இதுகாறும் தமது கணவனை விட்டுப்பிரிந்து தாபரிப்புப்பணம் பெற்று வந்தவராகும்.

மரமேறி வீழ்ந்திறந்தமை.

வண்ணார்பண்ணை புகைதப் பாதைக் கணித்தாக வசித்த செல்லப்பா என்னும் மரமேறி சென்ற செவ்வாய்க் கிழமை (7-5-35) காலை பனைமரத்திலிருந்து தவறி கீழே வீழ்ந்ததின் காரணமாக அடுத்த நாள் ஆஸ்பத்திரியில் உயிர் திறந்தான்.

குருபூசை.

நிகழும் யுவ ஆண்டு சித்திரைத் திங்கள் 15-ம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை மிகவுஞ் சிறப்பாக நடந்தது. அத்தருணம் ஷை யூர் பண்டிதர் பொன்னம்பல பிள்ளை அவர்கள் சுவாமிகளுடைய சரித்திரத்தையும் அற்புதச் செயல்களையும் பற்றிச் சிறந்தவோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர் ஷை வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களும் ஏனைய ஆசிரியர்களும் குறிப்புரை கூறினர்.

யாழ்ப்பாணம் கலாநிலையம்.

யாழ்ப்பாணம் கலாநிலையத்தின்கண் சென்ற மேமாதம் 9-திகதி வியாழக்கிழமை மாலை 4-மணிக்குத் திருவண்ணாமலையில் எழுந்தருளியிராநின்ற ஸ்ரீ ரமண மகா இருடிகளுடைய திருவுருவப்படம் மிகச்சிறப்பாகத் திறந்துவைத்துக் கொண்டாடப்பட்டது. இருஷிகளுடைய திருவுருவப் படம் புட்பங்களால் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதற்குக் கர்ப்பூர ஆராதனை செய்யப்பட்ட பின்னர் உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கள் இருஷிகளுடைய வாழ்க்கையில் திருச்சுழியலிலும், திருவண்ணாமலையிலும் நிகழ்ந்த நல்ல [illegible] சம்பவங்களை வருஷக் குறிப்புக்களோடு தெரிவித்துவிட்டு, அவர்தம் ஆசிரமத்திற்கு வரும் பக்குவர்களுக்குச் செய்தருளும் மிக நுட்பமான அத்துவித வேதாந்த ஞான போதனைகளைப்பற்றியும், அவர் இயற்றிய வேதாந்த நூல்களைப் பற்றியும், இருவகைப் பற்றையுந் துறந்தாரது பெருமையைப்பற்றியும், தத்துவ ஞானமும் ஒருகலையே யாகுமென்பதைப் பற்றியும், 'கலாநிலையம்' எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானதென்பதைப்பற்றியுந் தொகுத்துரைத்தார்கள். அதன்பிறகு, இலங்கைமான் வித்துவானும் யாழ்ப்பாண வாசியுமாகிய திரு. அண்ணாச்சாமி நாதஸ்வரமும், யாழ்ப்பாணம் வித்துவான் திரு. காமாட்சிசுந்தரம் தவிலும் வாசித்து வந்திருந்தோர் யாவரும் பெரிதும் வியக்குமாறு செய்தனர். அதன்பிறகு, திருமகளார் நடேசுவரிதேவியார் தம் இனிய குரலில் வீணையுடன் பாடிக் கேட்டோரை அகமகிழச் செய்தனர். அதன்பின்பு, வேதாரண்யம் சங்கீத வித்துவான் திரு ஐயாக்கண்ணுத் தேசிகர் தம் வாய்ப்பாட்டினாலும், யாழ்ப்பாணம் திரு. தங்கரத்தினம் தம் வயலினாலும், மாயவரம் திரு. சம்பந்தம் தம் மிருதங்கத்தினாலும், அவர்களைப்போலவே இராமநாதபுரம் திரு. கெ. ஆசிரத்தினம் முதலானவர்கள் தம் வாய்ப்பாட்டு முகவீணைகளாலும் சபையோரைக் களிப்படையச் செய்தனர். இவைகளெல்லாம் முடிவடைய இரவு 9-மணியாயிற்று. அதன்மேல், இருஷிகளுடைய திருவுருவப் படத்திற்குக் கர்ப்பூர ஆராதனை செய்யப்பட்டும், பன்னீர், சந்தனம், கற்கண்டு, வாழைப்பழம், சிற்றுண்டிகள் என்ற நிவேதனப் பொருள்கள் சபையார்க்கு வழங்கப்பட்டும் திருவிழா இனிது நிறைவேறியது.

இந்திய அரசியற் குறிப்புக்கள்.

—)o(—

பெண்மணிகளுக்கு ஸ்தானங்கள்.

வரப்போகும் புதிய அரசியல் நிர்மாணத்தின்படி ஸ்திரீகளுக்கு மாகாண சட்டசபைகளில் 6 ஸ்தானங்களை ஒதுக்கி வைத்திருக்கிறார் என்று அறிகிறோம். சென்னை, பஞ்சாப், பம்பாய், ஐக்கியமாகாணம், பீகார், வங்காளம் என்னும் மாகாணம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தானம் பெண்களுக்கென ஒதுக்கி வைக்கப்படுமாம். இதற்காவது மிஸ்ரர் பட்லர் சம்மதித்தால் நாம் ஆறுதலடையவேண்டியதுதான்.

முஸ்லீம்களும் காங்கிரசும்.

சென்னை முஸ்லீம் தொகுதியின் பிரதிநிதியாக இந்தியச் சட்டசபையில் உள்ள மௌல்வியைத் முர்தாஸா சாகிப் அவர்கள் சென்றவாரம் சேலத்து மகமதியவாலிபர் சங்கத்தாரவில் தற்கால இந்திய அரசியற் பிரச்சினைகள் என்னும் விஷயமாகச் செய்த சொற்பொழிவு ஒன்றில் சட்ட சபையிற் காங்கிரஸ் வேலையைப்பற்றியும் குறிப்பிட்டு முஸ்லீம்கள் அனைவரையும் காங்கிரசில் ஆயிரக்கணக்கிற் சேரும்படிவேண்டிக் கொண்டார். அவர் கூறியன வருமாறு:—

"காங்கிரசே பாரதகண்டத்தில் உண்மையான பிரதிநிதித்துவ தாபனமாகும். எல்லா இந்தியர்களும் அதிற்சேர்ந்துழைக்க வேண்டும். நான் காங்கிரஸ்வாதி என்ற நியதியில் சட்டசபைக்குத் தெரியப்படவில்லை. ஆனல் அங்கே எல்லா விஷயங்களிலும் காங்கிரஸ் அங்கத்தவர்களுடன் மனப்பூர்வமாக ஒத்துழைத்திருக்கிறேன். காங்கிரஸ் கட்சியில் சேர்வதற்கு யான் இப்போது உத்தேசித்திருக்கிறேன். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படவேண்டும் என்பதே எனதுபேரவா." மௌல்வி முர்த்தாஸா சாகிப் போன்றதேசிய முஸ்லீம்களின் அபிப்பிராயங்களை இந்திய அரசினர் சிந்திப்பாரா?

அடுத்த யுத்தத்திற் காயத்தம்.

ஐரோப்பாவில் யுத்தமேகங்கள் தோன்றியிருப்பதை முன்னிட்டு இந்திய அரசினரும் பரபரப்புக் கொள்ளுகின்றனர் என்று அவர்கள் செயல்களிலிருந்து அறியலாகும். இந்திய அரசினர் அங்கங்கேயுள்ள இராணுவ ஸ்தலங்களில் வேண்டிய முன்னேற்பாடுகள் செய்ய உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. யுத்தத்திற்குத் தேவையான பலவகைச் சாமான்களையும் உதவமுடியுமா. என்று அலகபாத் இராணுவ அதிகாரிகள் இராணுவ ஒப்பந்தக் காரரைக் கேட்டிருப்பதாக ஓர்தகவலினால் அறிகிறோம். ஆனல் யுத்தம் மூண்டு, இந்தியாவும் அதிற் சம்பந்தப் படுமானல், முன்போல இந்திய மக்கள் பணத்தாலும் உயிர்களாலும் தமக்கு அடக்குமுறைச் சட்டங்களால் நன்மைகள் ஈந்த அரசினர்க்கு உதவிசெய்வாரென்பதே கேள்வி.

பண்டிதரின் மறுப்பு.

ஸ்ரீமதி கமலாநேரு சிகிச்சைக்காக மேனாடுகளுக்குச் செல்லவேண்டிய காலம் நெருங்கிக்கொண்டிருப்பதால் அவருடன் செல்லுவதற்காக பண்டித ஜவஹர்லால் நேருவை அரசினர் விடுதலை செய்வாரா வென்பதைப்பற்றி பலரும் விவாதித்து வருகின்றார்கள்.

சில நிபந்தனைகளுக்குட்பட்டு விடுதலை செய்வதாக பண்டிதருக்கு அரசினர் அறிவித்தார்களென்றும், ஐரோப்பாவுக்கு அவர் மனைவியுடன் செல்லலாமாயினும் அவர் நினைக்கிறபோது இந்தியாவிற்குத் திரும்பிவரக்கூடாதென்பது அந்நிபந்தனைகளில் ஒன்றென்றும் விஷயமறிந்தவர்கள் சொல்லுகின்றார்கள். இதனல் சுபாஷ்பாபுவைப்போலவே பண்டிதரும் வெளிநாடுகளில் தங்கியிருக்கவேண்டியிருக்கும். இந்த நிபந்தனைக்கு இணங்க பண்டிதர் மறுத்துவிட்டாரென்று ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையினல் அறிகிறோம்,

சிங்களவாலிபனும் தமிழ்க்கன்னிகையும்.

பொலிசாரைக்கண்டவுடன் ஓட்டம்பிடித்தார்கள் நள்ளிரவில் ரணசிங்கியின் திருவிளையாடல்.

கடிதப்போக்குவரத்துமுன்னரே நடந்தது; கொண்டுசென்றபையனின் சாட்சியம்.

(நமது நிருபர்,)

கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா என்னும் மேசனின் 14 வயதுடைய மகளான நாகம்மா அல்லது தங்கம்மா என்னும்கன்னிகையை அவள்பெற்றோர் பாதுகாப்பிலிருந்து சென்ற (6-5-35) இரவு 12 மணி வரையில் கடத்திச்சென்றார்கள் என (1) ரணசிங்கி, (2) சைமன் சிங்கோ என்னுமிரு சிங்களர் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் நீதிபதி ஸ்ரீ K. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் முன்னிலையிற் குற்றஞ் சாட்டப்பட்டனர். பெண்ணின் தந்தைக்காக பிறக்ரர் ஸ்ரீ H R அரியகுட்டி ஏற்பட்டார்.

இவ்வழக்கில் 1-ம் சாட்சியாக ஷை பெண்ணின் தந்தையாகிய கந்தையா என்பவர் கொடுத்த சாட்சியம் வருமாறு:—

"சென்ற 6-5-35 திங்கட்கிழமையிரவு நானும் எனது மகளும் எங்கள் வீட்டில் உறங்கும்போது தலைவாசலில் அண்ணாமலை ஆறுமுகம் என்னும் 8 வயதுச் சிறுவனபடுத்திருந்தான். அவன எமது இனத்தைச் சேர்ந்தவனல்லன். அன்றிரவு 8 மணியளவில் என் வீட்டிற்கு வந்து தனக்குப் படுப்பதற்கு இடந் தரவேண்டுமென்று என்னைக் கேட்டான் நான் அவனை விசாரித்தளவில் தனது பெற்றோருடன் பிணக்குற்று ஓடிவந்ததாகக் கூறினன். நான் அவன்மீது சந்தேகம் கொள்ளாது தலைவாசற் கொட்டிலிற் படுக்கவிடுத்தேன்.

இரவு 2 மணிவரையில் வெளியில் சத்தங்கேட்டது. உடனே நான் நித்திரையினின்றும் எழும்பி "ரோச் லைற்"றின் மூலமாக என்ன சத்தம் என்று பார்த்தேன். ஆனல் ஒன்றையும் நான் காணவில்லை நான் திரும்பி வந்து தலைவாசலிற் படுத்திருந்த பையனைப் பார்த்தபோது அவனைக் காணவில்லை. மகளைக் கூப்பிட்டுப் பார்த்தேன். அவளையும் காணவில்லை. அயலட்டத்தில் அறிவித்துத் தேடிப்பார்த்தும் காணவில்லை.

இதற்கிடையில் "பெற்ரோல்" பொலிசாரான சார்ஜன்ற் அப்லாவும் P C. நாயரும் எனது மகள் நாகம்மாவுடன் என் வீட்டிற்கு வந்தார்கள். நான் மகளிடம் விசாரித்தபோது அவள், இந்தப் பையன் என்னை வந்து எழுப்பிக்கொண்டு போனனென்றும், வெளியில் நின்ற ரணசிங்கியும் சைமன் சிங்கோவும் தன்னைக் கண்டவுடன் ஓடிவந்து வாயில் துணியை அடைத்துப் பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு சென்றனர் என்றும் சொன்னள்."

நாகம்மாவின் சாட்சியம்

எனது வயது 14. இந்த எதிரிகளை முந்தியே எனக்குத் தெரியும் இவர்கள் என்னுடைய அயலில் வசித்தவர்கள். சென்ற 4-ம் தேதி இரவு இவர்கள் என் வீட்டிற்கு வந்தார்கள்.

மிஸ்ரர் H. R. அரியகுட்டியின் கேள்விகள்.

இந்த எதிரிகளை உனக்கு முந்தியே தெரியுமா?—ஓம்.

எப்படித் தெரியும்? —என்னுடைய அயலில் இவர்கள் வசித்தவர்கள்.

சென்ற 4-ம் தேதி யிரவு உன் வீட்டிற்கு யாரும் வந்தார்களா? —ஓம் இந்த எதிரிகள் வந்தனர்.

வேறு யார் இவர்களுக்கு முன் வந்தனர்? —ஆறுமுகம் வந்தான்.

அவன் அங்கே வந்து என்ன செய்தான்? —படுக்கிறதற்கிடங்கேட்டுப் படுத்துக் கொண்டான்.

பிறகு நடந்ததென்ன? —இரவு 2 மணி வரையில் அவன் என்னை வந்தெழுப்பி வெளியில் வரச் சொன்னன்.

நீ அதற்கு உடன்பட்டு வெளியில்வந்தாயா?—ஓம்.

வெளியில் வந்தபோது யாரைக்கண்டாய்? —இந்த எதிரிகள் இருவரையும் வெளியே ஒழுங்கையிற் கண்டேன்.

அப்புறம் நிகழ்ந்ததென்ன? —அவர்கள் என்னைத் தம்முடன் கொழும்புக்கு வரச் சொல்லிக்கேட்க நான் அதற்கிணங்கி அவர்களுடன் புறப்பட்டேன்.

மேலும் சாட்சி கூறியன

'நான் அவர்களுடன் கூடிக்கொண்டு கோண்டாவில் மார்க்கமாகச் சென்றபோது, "பெற்ரோல்" பொலிசாரின் விளக்கு வெளிச்சத்தைக் கண்ட எதிரிகள் இருவரும் என்னைத் . தனியே விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். பொலிசார் என்னிடம்வந்து என்னை விசாரித்தார். நான் எங்கேயோ போகிறேன் என்று கூற, அவர்கள் எனக்கு விவாகமாயிற்று என்று கேட்க அதற்கும் ஓம் என்றேன்."

அண்ணாமலை ஆறுமுகத்தின் சாட்சியம்.

"வயது 9. இந்த எதிரிகளை எனக்கு முன்னமே தெரியும். இவர்கள் என் வீட்டிற்குச் சமீபமாக இருக்கிறவர்கள். இது சம்பவம் நடந்த தினத்தன்று இரவு நான் இராப்போஜனத்தை முடித்தபின், இவ்வெதிரிகள் சொல்லித்தந்தபடி கந்தையா வீட்டுக்குப் போய்ப் படுத்தேன். இதற்கு முன், 1-ம் எதிரி ரணசிங்கிக்கும் நாகம்மாவுக்குமிடையே கடிதப் போக்குவரத்துக்கள் நிகழ்ந்தன. கடிதங்களை யானே காலத்துக்குக் காலம் சேர்ப்பித்தேன்".

இத்துடன் வழக்கு விசாரணை முடிவுற்றது. அடுத்த விசாரணை 21-5-35 இற்குத் தவணையிடப்பட்டது.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 7-ம்நெம்பர் சின்னக்கடைத்தெரு பெ. த. செல்வவிநாயகம் & மு. ம. இராசேந்திரம் என்பவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்

இல.	க.	ரூ.	சத.	நகைகளின் விபரம்.
1933 ஆ 11 ௴				
9244	3	8		இமிற்றேசன் ஜெறோடு சோ. 1
9270	7	12		டாமியுடன் இமிற்றேசன் ஒப்பின் பதக்கம் 1
9280	8	7		செவ்வத்தித் திருகுபூ 1
9301	12	150		அரைஞாண் 1ம் அரைப்பவுண் 2ம் கோத்தகருதச்சங்கிலி 1 மெழுகுடன் பட்டணக்காப்பு சோடி 1
9362	24	5	25	கல் மோதிரம் 1
9376	26	12		இமிற்றேசன் கல்தோடு சோடி 1
12 ௴				
9445	10	6	04	ஒற்றைக்கல் தோடு சோடி 1
9487	18	11		மூன்று நால் மணிபட்டியல் 1
9520	21	12		டிம்மியுடன் பதக்கம் 1
9546	29	12	16	வெ. பாதசரம் சோடி 1
1934 ஆ 1 ௴				
9605	10	13	50	பெட்டி மோதிரம் 1
9606	10	20		முத்து புரூச் 1, முத்துக் கவுத்தோர் 1
9660	20	30		பதக்கமுடன் நெற்றிவரி உச்சிவரி சந்திரப்பிறை சூரியப்பிறை முறையே 1
9671	22	90	04	பவுன் அருணக்கொடி 1
9691	27	15	04	இமிற்றேசன் கல்தோடு சோ. 1
6657	28	12	04	சலாவல மோதிரம் 1
2 ௴				
9790	19	15	04	செவ்வத்தித் தோடு சோடி 1
9804	25	7	04	இமிற்றேசன் பதக்கம் 1
9806	26	14	04	குண்டுவைத்த அரைப்பவுண் 2 சதேரபதம் 1
9817	28	15	04	சிறு சிவத்தக்கல் பெண்டன் 1
3 ௴				
9830	5	8		கொப்புச்சிமிக்கி சோடி 2
9846	8	15	04	இமிற்றேசன் பதக்கம் 1
9869	14	16	04	இமிற்றேசன் பதக்கம் 1
9870	14	7		சிறு மோதிரம் 1
9883	21	10		சிறு திருகுபூ 1 பொன் கொப்புச் சிமிக்கி சோடி 1
4 ௴				
9921	3	12		சிவப்புக்கல் மோதிரம் 1
9924	4	12		நடுவில் கல்வைத்த செவ்வத்தித் தோடு சோடி 1
9967	10	10	04	நட்டுவளையல் 6 பூ 1 இல்லை
9972	11	20		பின்கோக்கியுடன் உட்கட்டு தாலித் தட்டு 9
9996	14	40	50	பதக்கமுடன் கம்பிப்பூரானட்டியல 1 முத்து இல்லை
9997	14	50		மெழுகுடன் பட்டன் காப்பு சோடி 1
A 4	18	22	04	மோதிரம் 2
21	2	13	04	கல் கவுத்தோர் 1
28	23	0	04	[illegible] வைத்த புரூச் 1
30	24	15	04	தாலி பின்கோக்கியுடன் தாலிக் கொடி 1க்குத் தட்டு 9
37	25	8	04	கவுத்தோர் 1
56	30	13		குண்டுவைத்த இந்தியாப் பொத்தான் 5.

விற்பனவு [illegible] வைகாசிமாதம் [illegible] திகதிக்குச் சரியான (29 5 35) புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் [illegible] பிரசித்தமாக மீகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. [illegible],
வெர்ஜின் மேனேசர்,
திரிகோணமலை.

9 5 35.
(Mis. 52. 13&16-5-35.)

குழந்தைகள் அதிகம் சக்தியை உபயோகிக்கின்றனர்.

அவர்கள் ஆரோக்கியமாய் வளரப் பிரத்தியேக பெலம் தேவை.

"ஹோர்லிக்ஸ்" பால் சக்தியைக் கொடுத்து, பெலமுள்ள எலும்புகளையும் தசைகளையும் வளர்க்கின்றது.

படிக்கும்போதும் விளையாடும்போதும் குழந்தைகள், தங்கள் மூளையையும் தேகத்தையும் நாள் முழுவதும் களைக்கப்பண்ணுகிறார்கள். இக்களைப்பைப் புஷ்டியான சாப்பாட்டினாற் சரிப்படுத்தவேண்டும், ஏனெனில், உபயோகிக்கப்படும் சக்தியை மாத்திரம் கொடுப்பதன்றி, தேக வளர்ச்சிக்கான ஜீவசத்துக்களையும் இச்சாப்பாடு கொடுத்தல் வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட இரு காரியங்களையும் ஓர் உணவு கொடுக்காவிட்டால் குழந்தைகளின் வளர்ச்சி பங்கப்படும். அத்துடன் அவர்களின் பெலமும் குறையும் என்பதை வைத்திய நிபுணர் அறிவர். தேக வளர்ச்சியும் தேகப் பெலனும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டதாய்க் குழந்தைகள் விஷயத்தில் இருக்கவேண்டும்

பாதுகாப்புக்கேற்றது
ஹோர்லிக்ஸ் பாலே.

மனதை அதிலோ, இதிலோ என்று விடவேண்டாம். உங்கள் குழந்தைகளுக்கு தினம் ஒருமுறை அல்லது இருமுறை ஹோர்லிக்ஸ் பாலாகாரத்தைக் கொடுத்து, அக்குழந்தைகள் பிற்காலத்தில் ஆரோக்கியத்துடன் வாழ இப்போதே அத்திவாரம் இடுங்கள்.

குழந்தைகளின் உணவுடன் ஹோர்லிக்ஸ் பாலாகாரமும் கொடுப்பதால் அவர்களுக்குத் தேவையானதெதுவோ அது கொடுக்கப்படுகிறது. நாடோறும் உபயோகமாகும் சக்திக்குப் பதிலாகப் புதிய சக்தியும், அவர்களின் வளர்ச்சிக்கான சேமப் புஷ்டியும் உதவப்படுகிறது. ஹோர்லிக்ஸில் உள்ள ஓர் விசேஷ மென்னவெனில் அதில் உள்ள சத்துப் பொருள்கள் யாவும் ஜீரணிக்கப்படுகின்றன. அது அப்படித் தேகத்தாற் கிரகிக்கப்படுகிறபடியால்தான், கடின பதார்த்தங்களை உட்கொள்ள முடியாத நோயாளிகளுக்கும் நோய்வந்தவர்களுக்கும் ஹோர்லிக்ஸை ஒழுங்காகக் கொடுக்கவேண்டுமென டக்டர்மார் விதிக்கின்றனர்.

ஹோர்லிக்ஸ் முதல் முதலான மோல்ற்றட் பால்

ஹோர்லிக்ஸ் பாலின் தன்மை.

பகலின்பாலுடன், கோதுமை, மோல்ற்றட்வாளி என்பவற்றின் திறமான ஜீவசத்துப் பொருள்களைக் கொண்டது ஹோர்லிக்ஸ் பால் முழுவதும் ஜீவசத்துப் பொருள் நிறைந்ததே. குழந்தைகள் இப்பாலை விரும்புகின்றனர். வெந்நீரிலாவது, தண்ணீரிலாவது நன்கு கரையும். ஹோர்லிக்ஸ் கலக்கும் கருவியால் கரைப்பின் மிக ருசியானது. இக்கருவி கடைகளில் அல்லது 75 சத முத்திரை யனுப்பி கொழும்பு மில்லர் அன் கம்பனி லிமிற்றெட் இல் பெறற்பாலன.

HORLICKS MALTED MILK
Horlick's Mixer

சாதாரண பால் அல்லது சொக்கலேற் கலந்தது.
முழுவதும் தேகபுஷ்டிக்கான உணவு.

Mis 40. 2-5-35 to 16-5-35

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுதலிலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம, வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகை வகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை பித்தபாண்டு. பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மனிஓடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்து,
மட்டக்களப்பு.

(Y. 17 1-11-34 to 31-12-35) சிலோன்

தலைவலியுற்றபோது

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

தைலத்தை

நெற்றியிலும் கன்னத்திலும்

தேயுங்கள்

தலைவலி உடனே மாறிவிடும்

அதுவுமன்றி இது இந்தியாவில் இந்தியர்களாலே செய்யப்படுவது.

இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது.

(Y 16. 1-1-34—31-12-35)

காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்மெண்ட், முனிசிப்பல்
கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக்கொள்ளும்.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை,
316ம் நி-ர் கிட்டங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏஜென்றுமாராய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளையும் கச்சேரியடி கிழக்கு, கனகரத்தினம்றோட்டு, பொ. தம்புவும் நியமிக்கப்பெற்றிருக்கின்றார்கள்.

(Y 41. 21-5-34 to 20-5-35.)

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00.

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Y. 152. 21-11-34—20-11-35) (ஜ)

வான்முகில்வழாதுபெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க,
நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on the behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna at their Press, Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on MONDAY the 13TH MAY 1935.